## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.24/2024

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி D. ஞானசௌந்தரி அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சண்முகம் | மதம் | : இந்து |
| த/பெ | : கன்னிப்ப ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 84 | கிராமம் | : அருங்குளம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**26.03.2026**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு 2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். யார் அழைத்து நான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் வெங்கடேசன் அழைத்து வந்தேன். வெங்கடேசன் எனது உறவினரா என்றால் இல்லை. எனது கழனி பக்கத்தில் வெங்கடேசன் நிலம் உள்ளது. வெங்கடேசன் நிலத்திற்கு பக்கத்தில் உள்ளதா அல்லது வேறு நபருக்கு அருகில் நிலம் உள்ளதா என்றால் வெங்கடேசன் நிலத்திற்கு அருகில் நடராஜன் நிலம் உள்ளது. நடராஜன் நிலத்திற்கு அருகில் எங்கள் நிலம் உள்ளது.

2. வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு வழக்கறிஞர் படித்து காண்பித்தார். வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியுமா என்றால் நிலத்தை அளக்கும்போது இடம் அத்து மாறியிருந்தது. எனவே அவர் வழக்கு தாக்கல் செய்தார். வழக்கு சொத்தை வேலாயுதத்திற்கு விற்பனை செய்துவிட்டு மீண்டும் வெங்கடேசன் வாங்கியதில் அவர்களுக்குள் தகராறு இருந்தது

என்றால் சரிதான். நிலத்திற்குண்டான முழு பணத்தையும் வாங்கிகொண்டு எழுதி தராததால் மத்தியஸ்தம் வைத்து பேசி மீண்டும் பணத்தை திருப்பி வாங்கினார்கள் என்றால் ஆமாம். அதுமுதல் வாதிக்கும் பிரதிவாதி வேலாயுதத்திற்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான்.

3. இந்நீதிமன்றத்தில் இருந்து நிலத்தை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையர் வந்தபோது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். அவ்வாறு அளவீடு செய்யும்போது வெங்கடேசன் நிலத்தில் சிறிது வேலாயுதத்திற்கும் வேலாயுதம் நிலத்தில் சிறிது வெங்கடேசனுக்கும் அளவு மாறி வந்தது என்றால் ஆமாம். அன்று அளவீடு செய்து எல்லை குறிப்பிட்டப்படி வெங்கடேசன் வரப்பு அமைத்துக்கொண்டார் என்றால் ஆமாம். வேலாயுதத்திற்கு சம்மந்தப்பட்ட இடத்தை வெங்கடேசன் விட்டு கொடுத்துவிட்டார் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யும்போதே அவரவர் இடத்தை வாதியும் வேலாயுதமும் எடுத்து கொண்ட பின்பும் காழ்புணர்ச்சி காரணமாக வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)